செய்தி வெளியீடு நாள் : 03.08.2025

**சிஎம்டிஏ சார்பில் 30 ‘‘முதல்வர் படைப்பகங்களும்’’ மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 15 ‘‘முதல்வர் படைப்பகங்களும்’’ என மொத்தம் சென்னை மாநகரில் 45 ‘‘முதல்வர் படைப்பகங்கள்’’ உருவாக்கிய பெருமை நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சாரும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (3.8.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில், ஓட்டேரி, சுப்புராயன் தெரு, பட்டாளம், பக்தவச்சலம் பூங்கா, புளியந்தோப்பு, வெங்கடேசபுரம் புதிய காலனி மற்றும் மங்களபுரம் ஆகிய இடங்களில் **"முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான** பணிகளையும், பெரம்பூர், ஜமாலியா, மங்களபுரம் மற்றும் ஏகாங்கிபுரம் **மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை மேம்படுத்துவதற்கான** பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** முதன்மை மாநிலமாக மாற்றும் நோக்குடன், முதன்மை முதல்வரால் கட்டமைக்கப்படுகின்ற திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி, சென்னையின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், கல்லூரி மற்றும் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, பொருளாதாரத்திலும், சமூக நீதியிலும் கவனம் செலுத்தி, ஏழை எளிய மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகளை தரம் உயர்த்தி, அங்கு தேவையான உட்கட்டமைப்புகளை – அங்கன்வாடிகள், பூங்காக்கள், நடைபாதைகள், தரமான சாலைகள், தடையில்லா மின்சாரம், ஒளியளிக்கும் மின்விளக்குகள் – போன்ற வசதிகளை உருவாக்கி வருகிறது.

மழை மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவில் திரும்பும் வகையில், மழைநீர் வடிகால் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்புகளை, இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் மேம்படுத்தியுள்ளோம். இது திறம்பட நடைபெற்று வரும் **'திராவிட மாடல்'** ஆட்சியின் முக்கியமான முன்னேற்றமாகும்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்**, **‘‘முதல்வர் படைப்பகம்’’** என்ற திருவிழி கண்ணோட்டத்தில் உருவாக்கப்பட்ட இந்த மாபெரும் திட்டத்தின் முதல் கட்டம், அவரை தேர்ந்தெடுத்த **கொளத்தூ தொகுதியில் தொடங்கப்பட்டது**. மாதத்திற்கு குறைந்தபட்சம் 6,000 **மாணவர்கள்** பயன்பெறும் வகையில், உயர் கல்விக்கான அனைத்து வசதிகளுடன்

Verified RedEstate™

உருவாக்கப்பட்ட இந்த “முதல்வர் படைப்பகம், சமீபத்தில் நடைபெற்ற **டிஎன்பிஎஸ்சி தேர்வில் பயின்ற 6 மாணவர்களை வெற்றி பெறச் செய்துள்ளது.**

இந்த திட்டத்தின் கீழ், **மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய** உத்தரவின் பேரில் 30 **இடங்களில் முதல்வர் படைப்பகம்** அமைக்க திட்டமிடப்பட்டு, **ரூ.268 கோடி செலவில்** இதுவரை 26 **முதல்வர் படைப்பகளை** துவக்கி வைத்திருக்கின்றனர். இவற்றை **மாண்புமிகு முதல்வர்** அவரே காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்துள்ளார். இதனைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சியின் சார்பில், மேயர் திருமதி.பிரியா ராஜன் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்களும், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் திரு.பிரகாஷ் அவர்களும், சிஇஓ திரு.சிவஞானம் அவர்களும், ஆர்.டி.சி. திரு.கௌஷிக் அவர்களும், பகுதி செயலாளர் திரு.தமிழ்வேந்தன், மண்டல குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களும் ஆகியோருடன் இணைந்து இப்பணிகளை துவக்கி வைத்துள்ளோம்.

இப்பொழுது துவக்கப்பட்ட இந்த அனைத்து பணிகளும் 2025 நவம்பர் மாத இறுதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இப்பணிகள் முன்னேற்றத்தை மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற உள்ளாட்சி பிரதிநிதிகள் தினமும் கண்காணிக்க வேண்டும் என்பதும், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** எண்ணங்களுக்கு நிறம் தீட்டும் வகையில் செயல்படவேண்டும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டுக்குள் மேலும் 15 படிப்பகங்களை உருவாக்கும் திட்டத்தையும் சென்னை மாநகராட்சி அறிவித்து உள்ளது. இதன் தொடர்ச்சியாக, தற்போது வரை 45 **“முதல்வர் படைப்பகங்கள்”** சென்னை நகரில் உருவாக்கிய பெருமை **மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும்.**

சென்னை பாரிமுனை பகுதியில், வடசென்னையின் நுழைவாயிலாகக் கருதப்படும் பிராட்வே, பிரகாசம் சாலையில், மிகப்பெரிய நூலகம் உருவாக்கப்பட உள்ளது. இதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., சி.எம்.டி.ஏ. முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன் திரு.ராஜன்பாபு, இணை இயக்குநர் (பொது நூலகம்) திரு.இளங்கோ சந்திரகுமார், மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா, மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.சரவணன், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified @ RealEstate™